23 ஆகஸ்ட், 2026

**ஆண்டின் பொதுக்காலம்**

**21-ஆம் ஞாயிறு**

**மறைநூல் வாசகங்கள்:**

எசாயா 22:19-23; உரோமையர் 11:33-36; மத்தேயு 16:13-20

## முன்னுரை

ஒரு இளம் கட்டிடக் கலைஞரிடம், “ஒரு கட்டிடத்தின் மிக முக்கியமான பகுதி எது?” என்று கேட்கப்பட்டது. அவர் மேற்கூரை, சுவர்கள் அல்லது வடிவமைப்பின் அழகு என்று சொல்வார் என மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் அவரோ, “யாரும் பார்க்க முடியாத பகுதி அடித்தளம். அது பலவீனமாக இருந்தால், மற்ற அனைத்தும் இறுதியில் இடிந்து விழுந்துவிடும்” என்றார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த நகரத்தைத் தாக்கிய நிலநடுக்கத்தில், பல பிரம்மாண்டமான கட்டிடங்கள் விரிசலடைந்து விழுந்தன, ஆனால் உறுதியான பாறையின் மீது கட்டப்பட்ட கட்டிடங்கள் நிமிர்ந்து நின்றன. மறைந்திருந்த அந்த அடித்தளமே பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியது.

இன்றைய நற்செய்தி, நம்முடைய சொந்த வாழ்க்கையின் அடித்தளத்தைப் பற்றிச் சிந்திக்க நம்மை அழைக்கிறது. இயேசு தம் சீடர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறார். அது வெறும் மறைநூல் சார்ந்த கேள்வி மட்டுமல்ல, மிகவும் தனிப்பட்ட கேள்வி: “நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?” நம்முடைய நம்பிக்கை அலையாடும் மணல்மீது கட்டப்பட்டுள்ளதா அல்லது பாறையின் மீது கட்டப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் கேள்வி இதுதான்.

பேதுரு மிகுந்த துணிவுடனும் நம்பிக்கையுடனும், “நீர் வாழும் கடவுளின் மகனாகிய மெசியா” என்று பதிலளிக்கிறார். இயேசு அவருக்கு விண்ணரசின் திறவுகோல்களை வழங்கி, புயல்களும் எதிர்ப்புகளும் வந்தாலும் தம் திருச்சபை உறுதியாக நிற்கும் என்று வாக்களிக்கிறார். நம்பிக்கை என்பது வெறுமனே பரம்பரையாகப் பெறப்படுவதோ, கடன்

வாங்கப்படுவதோ அல்லது பொதுமக்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டதோ அல்ல; அது கிறிஸ்துவுடனான ஒரு தனிப்பட்ட உறவாக மாற வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி நமக்கு நினைவூட்டுகிறது.

நாம் இந்தப் பலிபீடத்தைச் சுற்றிக் கூடியிருக்கின்ற இந்த வேளையில், நம் நம்பிக்கை பலவீனமடைவதையும், பயம் நம்பிக்கையை ஆட்கொள்வதையும், நம் வாழ்வின் மையத்தில் கிறிஸ்துவை வைக்கத் தவறுவதையும் உணர்கிறோம். எனவே, ஆண்டவரிடம் இரக்கத்தையும் மன்னிப்பையும் கேட்போம்.

## மறையுரை

ஒரு பெரியவரின் பேரன் தன் தாத்தாவுடன் பாறைகள் நிறைந்த கடற்கரையில் நின்றுகொண்டு, அலைகள் பாறைகள்மீது மோதி சிதறுவதைப் பார்த்துக்கொண்டிருந்தான். தாத்தா, புயலிலும் உறுதியாக நிற்கும் ஒரு கலங்கரை விளக்கத்தைக் (Lighthouse) காட்டி, "இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தக் கலங்கரை விளக்கம் ஏன் நிற்கிறது தெரியுமா? அது பாறையின் மீது கட்டப்பட்டுள்ளது. புயல்கள் வருவதற்கு முன்பு அது யாரிடமும் அனுமதி கேட்பதில்லை. அடித்தளம் என்னவாக இருக்கிறது என்பதுதான் முக்கியம்" என்றார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, வாழ்க்கை எளிதாக இருந்தபோதல்ல; மாறாக, தன் குடும்பத்தில் நோய் தாக்கியபோது, நட்புகள் முறிந்தபோது, நம்பிக்கை சோதிக்கப்பட்டபோது தன் தாத்தா சொன்னதன் உண்மையான அர்த்தத்தை அந்தப் பேரன் புரிந்துகொண்டான். அப்போதுதான் வாழ்க்கையின் மிக ஆழமான கேள்வி இதுதான் என்பதை அவன் உணர்ந்தான்: என் வாழ்க்கை எதன்மீது கட்டப்பட்டுள்ளது? அல்லது இன்னும் தனிப்பட்ட முறையில் கேட்டால்: என் வாழ்வின் மையத்தில் யார் இருக்கிறார்?

இன்றைய நற்செய்தியின் மையத்தில் இருக்கும் கேள்வியும் இதுவே.

இன்றைய நற்செய்தி நிகழ்வு இயேசுவின் பகிரங்க வாழ்வின் ஒரு தீர்க்கமான திருப்புமுனையில் நடக்கிறது.

இது கால்பந்துப் போட்டியின் ‘இடைவேளை’ (Halftime) போன்றது. இடைவேளையின்போது, வீரர்கள் மைதானத்தை விட்டு வெளியேறி ஓய்வறைக்குச் செல்வார்கள். பயிற்சியாளர் இதுவரை என்ன நடந்தது என்பதை மதிப்பாய்வு செய்து, அடுத்து வரவிருப்பதை எதிர்கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்துவார். போட்டியைச் சிறப்பாக முடிப்பதற்கு எது மிகவும் முக்கியம் என்பதை நினைவூட்டுவார்.

இன்றைய நற்செய்தியிலும் இது போன்ற ஒன்றுதான் நடக்கிறது. இயேசு தம் சீடர்களுடன் யோர்தான் நதியின் தொடக்கத்திற்கு அருகில், இஸ்ரேலின் வடகோடியில் உள்ள செசாரியா பிலிப்புபோன்ற பகுதிக்குச் செல்கிறார். அது கூட்ட நெரிசல் இல்லாத அமைதியான, தனிமையான இடம். அது அவருடைய பகிரங்க ஊழியத்தின் “இடைவேளைக்கான ஓய்வு” என்று சொல்லலாம்.

இதுவரை, முதல் பாதி மிகவும் வெற்றியடைந்ததுபோல் தோன்றியது. மக்கள் கூட்டம் அவர் பின்னால் சென்றது. அவருடைய போதனையைக் கேட்டு மக்கள் வியந்தனர். அவர் நோயாளிகளைக் குணப்படுத்துவதையும், தொழுநோயாளிகளைத் தூய்மையாக்குவதையும், புயலை அடக்குவதையும், பேய்களை ஓட்டுவதையும், சில அப்பங்களும் மீன்களும் கொண்டு ஆயிரக்கணக்கானோருக்கு உணவளிப்பதையும் அவர்கள் கண்டார்கள். சிலர் அவரை அரசராக்கவும் விரும்பினர்.

முதல் பாதி வெற்றியின் முகமாகத் தெரிந்தது.

ஆனால், இரண்டாம் பாதி மிகவும் வித்தியாசமாக இருக்கும் என்பதை இயேசு அறிந்திருந்தார். விரைவில் அவர் புறக்கணிக்கப்படுவார், தவறாகப் புரிந்துகொள்ளப்படுவார், குற்றம் சாட்டப்படுவார், தண்டிக்கப்படுவார். ஒரு காலத்தில் “ஓசன்னா!” என்று ஆர்ப்பரித்த அதே கூட்டம், இறுதியில் “அவனைச் சிலுவையில் அறையும்!” என்று கத்தும்.

அவருக்கு முன்னால் இருக்கும் பாதை சிலுவையை நோக்கிச் செல்கிறது.

எனவே, அந்த அமைதியான இடத்தில் இயேசு ஒரு கேள்வியைக் கேட்கிறார்:

“மானிட மகனை யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?”

சீடர்கள்:

“சிலர் திருமுழுக்கு யோவான் என்றும், வேறு சிலர் எலியா என்றும், மற்றும் சிலர் எரேமியா அல்லது இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கிறார்கள்” என்று பதிலளிக்கிறார்கள்.

இவை மரியாதைக்குரிய பதில்கள். அவர்கள் இயேசுவை ஒரு தூய மனிதராக, இறைவாக்கினராக, கடவுளால் அனுப்பப்பட்ட ஒருவராக அங்கீகரிக்கிறார்கள். ஆனால் இயேசு இந்த இரண்டாம் கட்டக் கருத்துக்களில் திருப்தியடையவில்லை.

அடுத்து அந்தத் தனிப்பட்ட கேள்வி எழுப்பப்படுகிறது:

“ஆனால் நீங்கள்… என்னை யார் என்று சொல்கிறீர்கள்?”

முழு நற்செய்தியிலும் மிக முக்கியமான கேள்விகளில் இதுவும் ஒன்று.

இயேசு, “என்னைப் பற்றி நீங்கள் என்ன கேள்விப்பட்டீர்கள்?” என்று கேட்கவில்லை. “அறிஞர்கள் என்ன நினைக்கிறார்கள்?” என்றோ, “பொதுமக்களின் கருத்து என்ன?” என்றோகேட்கவில்லை. “நீங்கள் நான் யார் என்று சொல்கிறீர்கள்?” என்று கேட்கிறார்.

என்றாவது ஒரு நாள், ஒவ்வொரு சீடரும் இந்தக் கேள்விக்குத் தனிப்பட்ட முறையில் பதிலளித்தே ஆக வேண்டும்.

ஒரு ஆசிரியர் வகுப்பில் உள்ள குழந்தைகளிடம், “இயேசு உங்களுக்கு யார்?” என்று கேட்டார். ஒரு குழந்தை, “இயேசு வைஃபை (Wi-Fi) போன்றவர்” என்று பதிலளித்தது. ஆசிரியர் சிரித்துவிட்டு, “நீ என்ன சொல்கிறாய்?” என்று கேட்டார். அதற்கு அந்தக் குழந்தை, “அவரைப் பார்க்க முடியாது, ஆனால் இணைப்பு (Connection) அறுந்துபோனால் எதுவுமே வேலை செய்யாது” என்றது.

அந்தப் பதிலில் நாம் நினைப்பதைவிட அதிக ஞானம் இருக்கிறது. நம்பிக்கை என்பது இயேசுவைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்வது மட்டுமல்ல; அவரோடு உறவில் வாழ்வதாகும்.

பன்னிரண்டு சீடர்களின் சார்பில் பேதுரு கீழ்க்கண்டவாறு பதிலளிக்கிறார்:

“நீர் வாழும் கடவுளின் மகனாகிய மெசியா.”

அதன்பின்னர் இயேசு சொல்கிறார்:

“சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.”

மேற்கண்டவாறு சொன்ன அந்த நிமிடத்தில் இயேசு வெறும் தத்துவமாக இருப்பதை நிறுத்திவிட்டு, ஒரு உண்மையான நபராக மாறினார்.

செசாரியா பிலிப்புவில் நடந்ததும் இதுவே. சீடர்கள் இயேசுவைப் பற்றிய வெறும் கோட்பாடுகளோடு மட்டும் நிற்கவில்லை. அவர்கள் ஒரு தனிப்பட்ட அர்ப்பணிப்புக்குள் அழைக்கப்பட்டார்கள்.

ஒரு முதிய பெண்மணி ஒருமுறை தன் பங்குத் தந்தையிடம் சொன்னார்: “நான் இளமையாக இருந்தபோது, என் பெற்றோர் நம்பியதால் நம்பினேன். பிறகு என் கணவர் நம்பியதால் நம்பினேன். ஆனால் அவர் இறந்த பிறகு, வீட்டில் தனியாக அமர்ந்திருந்தபோது, நான் உண்மையில் நம்புகிறேனா என்பதை நானே கண்டறிய வேண்டியிருந்தது.”

அதுவும் ஒரு செசாரியா பிலிப்புஅனுபவம்தான்!

கடனாகப் பெற்ற நம்பிக்கை, தனிப்பட்ட சொந்த நம்பிக்கையாக மாற வேண்டிய ஒரு தருணம் வருகிறது.

நம்மில் ஒவ்வொருவரும் இயேசுவை வெவ்வேறாக அனுபவிக்கலாம். சிலர் அவரை வழிநடத்தும் நல்ல ஆயராக அறிவார்கள்; சிலர் அவரை ஊட்டமளிக்கும் வாழ்வின் அப்பமாகச் சந்திக்கிறார்கள்; சிலர் இருளில் ஒளியாக அவரைப் பற்றிக்கொள்கிறார்கள்; சிலர்

துயரங்களின் வழியே கூடவே நடக்கும் பரிவுள்ள நண்பராகச் சந்திக்கிறார்கள்.

ஆனால் முக்கியமானது அவரைப் பற்றித் தெரிந்திருப்பது மட்டுமல்ல, அவரை ஆழமாக அறிந்திருப்பதே.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல் அடிகளார் இந்த வியப்பை வெளிப்படுத்துகிறார்:

“கடவுளின் வளம், ஞானம், அறிவு ஆகியவை எத்துணை ஆழமானவை!”

பவுல் அடிகளார்கூட கடவுள் நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குப் பெரியவர் என்பதை உணர்கிறார். இருப்பினும்,

இந்த அளவற்ற கடவுள் நம்முடன் ஒரு தனிப்பட்ட உறவை விரும்புகிறார். அவர் நம்மைப் பெயர் சொல்லி அழைத்திருக்கிறார். அவரை நம்பும்படி நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

பிறகு இயேசு மற்றொரு சக்திவாய்ந்த குறியீட்டை அறிமுகப்படுத்துகிறார்:

“அது விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன்.”

திறவுகோல்கள் என்பது நம்பிக்கையின் குறியீடு. நாம் நம் வீட்டுச் சாவியை அந்நியர்களிடம் கொடுப்பதில்லை. யாருக்காவது திறவுகோலைக் கொடுக்கிறோம் என்றால், “நான் உன்னை நம்புகிறேன்” என்று அர்த்தம்.

முதல் வாசகத்தில், தாவீதின் குடும்பத்தின் திறவுகோலானது எலியாக்கிமின் தோள்மீது அதிகாரத்தின் அடையாளமாக வைக்கப்படுகிறது.

நற்செய்தியில், இயேசு பேதுருவிடம் விண்ணரசின் திறவுகோல்களை ஒப்படைக்கிறார்.

ஆனால் நற்செய்தியில் அதிகாரம் என்பது ஒருபோதும் ஆதிக்கம் செலுத்துவது அல்ல; அது தொண்டு செய்வதாகும் (சேவை). பேதுரு விண்ணரசின் கதவுகளை மூடுவதைவிட திறப்பதற்காகவே அழைக்கப்படுகிறார்.

இதயங்களைக் கிறிஸ்துவுக்குத் திறப்பது, கடவுளின் இரக்கத்திற்கான வழிகளைத் திறப்பது, நம்பிக்கையின் பாதைகளைத் திறப்பது.

ஒரு பங்குத்தந்தை போர்க்காலத்தில் சேதமடைந்த ஓர் ஆலயத்தைப் பற்றிய கதையைக் கூறினார். ஆலய நுழைவாயிலுக்கு அருகில் இருந்த இயேசுவின் சொரூபத்தில் இரண்டு கைகளும் உடைந்திருந்தன. சிலர் அதை மாற்றிவிட விரும்பினர், ஆனால் பங்குத்தந்தை அந்தச் சொரூபத்தின் கீழ் ஒரு பலகையை வைத்தார். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது:

"கிறிஸ்துவுக்கு இப்போது நம்மிடம் உள்ள கரங்களைத் தவிர வேறு கரங்கள் இல்லை."

அந்தக் கரங்களைச் சேவையின் கரங்களாக மாற்றுவதே திருச்சபையின் பணி!

அது பூரணத்துவம் அல்ல, பெருமை அல்ல, சேவையே அதன் பணி.

பேதுருவும் கூட குறைபாடற்றவர் அல்ல. "நீர் மெசியா" என்று அறிக்கையிட்ட அதே பேதுருதான், பின்னாளில் இயேசுவை மூன்று முறை மறுதலிக்கிறார். இருப்பினும் இயேசு தம் நம்பிக்கையைத் திரும்பப்பெறவில்லை.

அது நம் அனைவருக்கும் ஊக்கமளிக்க வேண்டும். கடவுள் எப்போதும் குறைபாடுள்ள மனிதர்கள் மூலமாகவே கிரியை செய்திருக்கிறார்.

ஒரு ஆசிரியை, பட்டமளிப்பு முடிந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் முன்னாள் மாணவன் தன்னைச் சந்திக்க வந்ததாகக் கூறினார். வேறு யாரும் தன்மீது நம்பிக்கை வைக்காதபோது, தன்மீது நம்பிக்கை வைத்ததற்காக அவன் நன்றி கூறினான். அந்த ஆசிரியை கண்ணீருடன், "என் வார்த்தைகள் இவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கவே இல்லை" என்றார்.

நம்மைப் பிறரின் வாழ்க்கையில் கடவுள் எங்ஙனம் பயன்படுத்துகிறார் என்பதை நாம் அரிதாகவே உணர்கிறோம்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நம்பிக்கையைத் திறக்கும் திறவுகோல்களை வைத்திருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் மனங்களை உண்மைக்குத் திறக்கும் திறவுகோல்களை வைத்திருக்கிறார்கள்.

குருக்கள் அருட்சாதனங்கள் மூலம் இதயங்களைத் திறக்கும் திறவுகோல்களை வைத்திருக்கிறார்கள்.

நண்பர்கள் தயவிலும் ஊக்கத்திலும் காயப்பட்ட உயிர்களைத் திறக்கும் திறவுகோல்களை வைத்திருக்கிறார்கள்.

ஒரு எளிய நல்ல வார்த்தைகூட நம்பிக்கையைத் திறக்க முடியும்.

எனவே, இன்றைய நற்செய்தி நம்மிடம் இரண்டு கேள்விகளைக் கேட்கிறது:

1. எனக்கு இயேசு யார்?
2. மற்றவர்களுக்காக எந்தக் கதவுகளைத் திறக்க அவர் என்னைக் கேட்கிறார்?

கிறிஸ்தவர்கள் எப்போதும் பலமாக, ஞானமுள்ளவர்களாக அல்லது பரிசுத்தமானவர்களாக இருப்பதால் திருச்சபை வாழவில்லை; மாறாக, கிறிஸ்துவே அதன் உண்மையான அடித்தளமாக இருப்பதால் அது நிலைத்திருக்கிறது.

புயல்கள் வரும். அவதூறுகள் வரும். பலவீனங்கள் வரும். எதிர்ப்புகள் வரும்.

இருப்பினும் கிறிஸ்து உண்மையுள்ளவராகவே இருக்கிறார்.

ஒரு மழையுடன் கூடிய புயலில் சிக்கிய ஒரு பயணியைப் பற்றிய ஒரு பழைய கதை சொல்லப்படுவதுண்டு.

மழை அவர்மீது கொட்டியது, இருள் சூழ்ந்தது, இரவைக் கடக்க முடியுமோ என்று அவர் பயந்தார். அப்போது தொலைவில் ஒரு சிறிய வெளிச்சத்தைக் கண்டார். அதைப் பின்பற்றிச் சென்றவர், பாறையில் உறுதியாகக் கட்டப்பட்ட ஒரு சிறிய குடிசையை அடைந்தார்.

அவர் நடுக்கத்தோடு உள்ளே நுழைந்தபோது, அங்கிருந்த ஒரு முதிய பெண்மணி புன்னகையுடன், “உங்கள் நம்பிக்கை உறுதியான பாறையில் இருந்தால், வெளியே வீசும் புயலுக்குப் பயப்படாதீர்கள்” என்றார்.

அதுவே இன்றைய நற்செய்தியின் செய்தி.

வாழ்க்கையின் புயல்கள் வரும். கூட்டத்தின் கைதட்டல்கள் ஓயலாம். வாழ்க்கையின் இரண்டாம் பாதி முதல் பாதியைவிடக் கடினமாக இருக்கலாம். ஆனால் கிறிஸ்து உண்மையிலேயே நம் வாழ்வின் மையமாக இருந்தால், நம் நம்பிக்கை சூழ்நிலைகளின் மீதல்லாமல் அவர் மீது நிலைத்திருந்தால், நாம் உறுதியாக நிற்க முடியும்.

பேதுருவைப் போல, நாமும் நம் இதயத்தின் ஆழத்திலிருந்து பதிலளிப்போம்:

“நீர் வாழும் கடவுளின் மகனாகிய மெசியா.”

மேலும் பேதுருவைப் போல நம் நம்பிக்கையின் பலத்தையும் நம்பிக்கையையும் பார்த்து, மற்றவர்களும் கிறிஸ்துவைத் தங்களின் சொந்த வாழ்க்கைப் பாறையாகக் கண்டுகொள்வார்களாக! ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,**Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai